① 755 19/3/71

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

விசேஷ பதிப்பு

இல: 1167 1971 மார்ச் 17 புதன்கிழமை ★ ★ ★ விலை சதம் 5

University of Jaffna RECEIVED Periodicals Division Library

# பொலீஸ் நிலையங்களில் பலத்த பாதுகாப்பு

## பயங்கரவாதிகளிடம் துப்பாக்கிகள் சிக்கிவிடுமென அச்சம்

**பொலீஸ் நிலையங்களில் உள்ள துப்பாக்கிகளையும், மற்றும் ஆயுதங்களையும் இரும்புக் கதவுகள், இரும்பு ய்ன்னல்கள் அடங்கிய பாதுகாப்பு அறைகளில் பத்திரப்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

இப்படி துப்பாக்கிகளையும் மற்றும் ஆயுதங்களையும் பாதுகாப்பதற்காக நாடெங்கும் உள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் எஃகு கதவுகள், யன்னல்கள் கொண்ட பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட உள்ளன.

இத்தகைய பாதுகாப்பு அறைகள் அமைக்கப்படும் வரை சகல பொலீஸ் நிலையங்களிலும் உள்ள ஆயுதங்களை ரகசியமான இடங்களில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளள்ளது.

நாடெங்கும் வலுப்பெற்று வரும் புரட்சிக் குழுக்களின் நடவடிக்கைகள் காரணமாகவே பொலீஸ் நிலையங்களில் இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனத் தெரியவருகிறது.

ஏற்கனவே நாட்டின் பல பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. பொலீஸாரின் தீவிர நடவடிக்கை காரணமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த பல ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குழப்பக்காரர்கள் பொலீஸ் நிலையங்களில் இருந்து துப்பாக்கிகளைக் கடத்த முயலலாம் என்று பொலீஸ் திணைக்களம் பீதி அடைந்திருப்பதாக நம்பப்படுகிறது. (த-12)

## ஸ்ரீமாவோவுக்கு முக்கியத்துவம்

புதுடில்லி, மார்ச் 16

இந்திய லோக சபைத் தேர்தலில் திருமதி இந்திரா காந்தியின் வெற்றி சம்பந்தமாக இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பாராட்டுச் செய்திகள், இந்தியத் தினசரிகளில் படத்துடன் வெளிவந்துள்ளன.

இந்திய மக்கள் சோஷலிசப் பாதையை நோக்கிச் செல்ல திருமதி இந்திரா காந்திக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர் என்ற சாராம்சம்பட திருமதி ஸ்ரீமாவோ

(4-ம் பக்கம் பார்க்க)

## மீனாட்சி



என்னங்க மத்தியதரக் குடும்பங்களுக்குக் கறுவாக்காட்டில் மாடி வீடு களாமே!

ஆமாங்க, ஆனால் அங்குள்ள சிலருடன் இவர்களிற் சிலரும் சேர்ந்து "சாரி" வேட்டையில் இறங்காதிருந்தால் போதும்!

## வெடிகுண்டு தயாரிப்பில் குண்டு டபார்: ஐவர் மரணம்

வறக்காப்பொலை, மார்ச். 16

ரகசியக் கூட்டம் ஒன்று வெடிகுண்டு தயாரித்துக் கொண்டிருக்கையில் குண்டு வெடித்ததினால் ஐவர் மரணமடைந்தனர். இப்பரபரப்பூட்டும் செய்தி டெடிகமைத் தொகுதியில் நெலுந்தெனியாவில் நடந்தது. இச்சம்பவம் நேற்று மாலை நடந்தது இது பற்றிய விபரமாவது:-

வாலிபர்களைக் கொண்ட ஒரு குழு நெலுந்தெனியாவுக்கு அண்மையில் உள்ள காடொன்றில் பாழடைந்த வீட்டில் வைத்து வெடி குண்டு தயாரித்திருக்கிறது. தயாரிப்பின்போது ஏற்பட்ட ஒரு தவறுதலை அடுத்து வெடி குண்டு ஒன்று வெடித்ததனால் பக்கத்திலிருந்த குண்டுகள் பலவும் வெடித்துள்ளன. இக்குண்டு வெடிப்புத் தாக்குதலுக்குள்ளான இருவரது கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இருவரும் படுகாயத்துக்குள்ளாகி இறந்துள்ளனர். மூவர் ஆஸ்பத்திரியில் காலமானார்கள். இன்னும் காயமடைந்த சிலர் மறைந்திருப்பதாகத் தெரிகிறது. வெடிகுண்டு வெடித்த ஸ்தலத்திற்கு விரைந்த டெடிகமை பொலீஸார் சம்பந்தப்பட்ட பாழடைந்த வீட்டை மிகவும் தயக்கத்துடனே நெருங்கினர். இதற்கு அந்த வீட்டில் பல இடங்களில் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகள் இருந்தமையே காரணம்.

இதுபற்றிப் பலத்த வதந்திகள் இங்கு நிலவுகின்றன. சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இவர்கள் இருக்கக்கூடும் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. பட்டப் படிப்புப் படித்த ஒருவரின் தலைமையிலேயே இக்குழு இப்பயங்கர வேலையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகிறது. கேகாலைப் பொலீஸார் டெடிகமைப் பொலீஸாரின் அனுசரணையுடன் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். (333)

## சாரணர் இயக்கம்

வறக்காப்பொலை, மார்ச், 16

நாம்புலுனை முஸ்லிம் வித்தியாலயத்தில் சாரணர் படை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

## மணிக்கு 250 மைல் வேகம் ஓடும் வாயுமெத்தை ரயில்

லண்டன், மார்ச். 16

ரயில் போக்குவரத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்படவிருக்கிறது. காற்று மெத்தையில் மிதந்தபடி அதிவேகமாகச் செல்லும் புதுமையான "வாயுமெத்தை ரயில்கள்" எதிர் காலத்தில் இப்புரட்சிகரமான மாற்றத்தை தோற்றுவிக்கவிருக்கின்றன. இந்த ரயில்கள் சேவையில் விடப்பட்டதும் 250 மைல் வேகத்தில் பிரயாணிகள் நகரத்திற்கு நகரம் "பறந்து" செல்வது சாத்தியமாகும்.

பிரிட்டிஷ் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பொறியியல் விஞ்ஞானிகள் இந்த ரயிலை உற்பத்தி செய்வதில் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். மாதிரி ரயில் ஒன்றை அமைத்துள்ள இவ்விஞ்ஞானிகள் இதனை விரைவில் பரிசோதனை செய்து பார்க்கவிருக்கிறார்கள். பீட்டர்ஸ்பர்க் என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ள மூன்று மைல்தூர கான்கிரீட் பாதையில் இந்த மாதிரி ரயில் பரிசோதனைக்கு ஓடவிடப்படும்.

சக்தி வாய்ந்த உந்துவிசைப் பொறிகளால் இயக்கப்படும் இந்த ரயில் 250 மைல் வேகத்தில் செல்லும்போது எவ்வித ஆட்டமோ இரைச்சலோ ஏற்படாது, வானொலித் கட்டுப்பாட்டுச் கருவிகள் புதுமையான வாகனமிது.



"திருகோணமலை உல்லாசப் பயணிகளுக்கு ஒரு சொர்க்க பூமி. இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை." இவ்வாறு தந்தி நிருபரிடம் கூறினர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வான்கூரன் தம்பதிகள்.

திருகோணமலைக் கடற்கரையில் உல்லாசமாகப் பொழுது போக்கிய இத்தம்பதிகள் "தந்தி" க்கு எனக் கொடுத்த பிரத்தியேக போஸ் இது. (த-287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியை அங்கொடைக்கு அனுப்புக —நீதிபதி

# 8 மாதக் கர்ப்பிணியை வெட்டிக் கொன்ருர்

"இறந்து போன எனது மகள் எட்டு மாதக் கர்ப்பிணி. சம்பவம் நடைபெற்ற தினம் நான் பகல் 2-00 மணிக்கெல்லாம் அயல் வீட்டுக்குச் சென்றேன். சற்று நேரம் கழித்து "அம்மே, அம்மே" என அலறும் சத்தம் கேட்டது"

"நான் சத்தம் வந்த இடத்துக்குச் சென்றபோது எனது மகள் வீதி வழியாக ஓடி வந்தாள். அவளின் கணவரான எதிரி கத்தி ஒன்றுடன் பின்னுல் துரத்தியபடி ஓடி வந்தார்"

இவ்வாறு கம்பஹா நாரங்தொடையில் வசிக்கும் 45 வயதான லூசிஹாமி என்பவர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் கூறினுர்.

1969 அக்டோபர் 16-ம் திகதி டபிள்யூ. ஏ. ரோஸலின் பெரேரா என்பவர் தமது சொந்த மனைவியை வெட்டிக் கொலை செய்ததாகவும், மாமியாரைக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் நீர்கொழும்பைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. ஹாஸன் சிங்ஹோ என்பவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நீதிமன்றத்தில் சாட்சியமளித்த லூஸிஹாமி மேலும் கூறியதாவது:- "இறந்து போனவர் எனது மகள். எதிரி மருமகன். இந்த சம்பவத்துக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு எதிரி எனது மகளை மணம் முடித்தார்.

"மணமுடித்த பின்பு மகளும், மருமகனும் எனது வீட்டில்தான் வசித்து வந்தனர். மணமுடித்த பிறகு இருவரும் அடிக்கடி சண்டை பிடித்தனர். சம்பவம் நடைபெற்ற தினம் நான் வெளியே சென்ற போது வீட்டில் மகளும், மருமகனும், மகளது மகனும், எனது இளைய மகனும்தான் இருந்தனர்.

"கொலை செய்யப்படும் போது எனது மகள் எட்டு மாத கர்ப்பிணியாக இருந்தாள். சம்பவம் நடைபெற்ற தினம் நான் அயல் வீட்டுக்குச் சென்றிருந்தேன். சிறிது நேரத்தில் "அம்மே, அம்மே" என சத்தம் கேட்டது.

"சத்தம் வந்த திசையில் ஓடினேன். அங்கே எனது மகள் வீதி வழியாக ஓடிவந்து கொண்டிருந்தாள். மருமகன் கத்தி ஒன்றுடன் அவள் பின்னுல் ஓடிவந்து கொண்டிருந்தார்.

"மகள் கீழே தடுக்கி விழுந்தாள். அப்போது நான் கூக்குரலிட்டேன். அதுசமயம் எனது மருமகனை எதிரி கத்தியால் என்னை தாக்கினர். எதிரி என்னைக் கத்தியால் தாக்க முன்பு மகளின் உடலில் உள்ள காயத்தை நான் கண்டேன். மகளின் கழுத்தில் வெட்டுக் காயம் இருந்தது. என்னைக் கத்தியால் தாக்கிய எதிரி பின்பு வயலுக்கு ஓடினர்."

இவ்வாறு சாட்சி கூறினர்.

ராகம ஆஸ்பத்திரி டாக்டர் எல். டபிள்யூ. பெரேரா சாட்சியமளிக்கையில், "இறந்த பெண்ணைத் தான் பரிசோதித்த போது அவர் எட்டுமாத கர்ப்பிணியாக இருந்தாள்" எனக் கூறினர்.

அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரி டாக்டர் ஏ. சித்தம்பலம், பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஹென்றி திஸாநாயக்கா, டபிள்யூ. ஏ. ஜூலியஸ் பெரேரா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற போது எதிரி சுயஅறிவுடன் இருக்கவில்லை. எனவே அவர் மீது கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்த முடியாது என ஜூரிமார் ஏகமனதாக கூறியதால், நீதி அமைச்சரின் அறிவித்தல் வரும் வரை எதிரியை அங்கொடை மன நோயாளர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (த-12-ஸ)

## டிமிக்கி கொடுத்து வந்தவர் வகையாக மாட்டினுர்

ஹத்மனை. மார்ச் 16

மூன்று வருடங்களாகப் பொலீஸாருக்கு டிமிக்கி கொடுத்து வந்த நபர் ஒருவரை ஹத்மனைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. எஸ். சுந்தரநாதன் ஹத்மனைப் பொலீஸ் வட்டாரத்தில் உள்ள யட்டிகல என்னும் இடத்தில் வைத்துக் கைது செய்தார்.

ஜஸ்டின் அபேவர்தன என்ற இந் நபர் கைது செய்யப்படும் போது இவரிடம் 5½ அங்குல நீளமான கத்தி ஒன்றும் இருக்கக் காணப்பட்டுள்ளதாம்.

அம்பாறைப் பொலீஸ் வட்டாரத்தில் 1968-ம் ஆண்டு நடைபெற்ற ஓர் கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த நபரே இவராவார்.

இவரைக் கண்டுபிடிக்க உதவும் படி பொலீஸார் பொதுமக்களை கேட்டு இவரது புகைப்படங்களை மாட்டியிருந்தனர். (த)

## நீதி நேர்மை நிலவுக!

உத்தரவாத விலையில் அரசினர் நெல் வாங்கும் திட்டத்தில் சில அதிகாரிகள் மோசடிகள் செய்வதாகப் பொது மக்கள் நீண்ட காலமாகப் புகார்கள் கூறி வந்த ார்கள்- இவற்றை விசாரித்து இத்தகைய மோசடிகள் மேலும் நிகழா வண்ணம் செய்ய விவசாய அமைச்சர் தீர்மானித்துள்ளார். அதன்படி ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஐவர் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்படும். இவர்கள் பொது மக்களின் புகார்களை விசாரித்து நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டுவார்கள். ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கான ஐவரை அவ்வத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர்களே குறிப்பிடுதல் வேண்டும் என்றும் விவசாய அமைச்சர் கேட்டுள்ளார். இக்கமிட்டிகள் விரைவில் நியமிக்கப்பட்டு நீதியையும், நியாயத்தையும், நேர்மையையும் நிலைபெறச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்ரேம்.

தந்தி

## வேலை கிடைக்காததால் வாலிபர் தற்கொலை

"இறந்துபோன எனது மகன் நல்ல கல்வியறிவு உடையவன். அவன் உத்தியோகம் ஒன்றைத் தேடிக்கொள்ள மிகவும் கஷ்டப்பட்டான்.

"உத்தியோகம் ஒன்றும் கிடைக்காததால்தான் அவன் மிகவும் மன வேதனையுடன் இருந்தான். மன வேதனையின் காரணமாகத்தான் அவன் விஷம் அருந்தியிருக்கக் கூடும்."

தனது மகனின் மரண விசாரணையின்போது தந்தை ஒருவர் கண்ணீர் வடித்தபடி இவ்வாறு சாட்சியமளித்தார்.

ஹப்புத்தளை பொலீஸ் வட்டாரத்தைச் சேர்ந்த ஸர்லூட் தோட்டத்தைச் சேர்ந்த எஸ். காளிமுத்து என்னும் இருபத்தியொரு வயது வாலிபன் கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவரது மரண விசாரணையின்போதுதான் அவரது தந்தை மேற்கண்டவாறு கூறினர். (த-12-ஸ)

## ஆசிரியருக்கு ஆயுட் தண்டனை

மொண்றிட்ஸ், மார்ச் 16

கியூபெக் தொழில் அமைச்சர் பியரேலப்போர்ட்டைக் கொலை செய்த போல் ரூஸ் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இருபத்தேழு வயது நிரம்பிய ரூஸ் ஓர் ஆசிரியர் ஆவார்.

கியூபெக் விடுதலை முன்னணியைச் சேர்ந்த கொமாண்டோக்களால் கடந்த வருடம் அக்டோபர் மாதம் லப்போட் கடத்திச் செல்லப்பட்டார்.

சில தினங்களின் பின் கார் ஒன்றுக்குள் இவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கோர்ட்டில் தனக்குத் தானே வாதாடிய ரூஸ் அமைச்சரைக் கடத்திச் சென்றவர்களில் தானும் ஒருவர் என்று ஒப்புக் கொண்டார். (த-8)

## உணவுப் பொருட்களை விநியோகிக்க ராணுவம்

உணவுப் பொருட்களையும் மற்றும் பொருட்களையும் ஈாடெங்கும் விநியோகம் [illegible]யும் வேலையில் விரைவில் இராணுவத்தினர் ஈடுபடுத்துப்படலாம் என த் தெரியவருகிறது.

பொருட்களின் [illegible]நியோக வேலையில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது குறித்து அரசாங்கம் தற்போது ஆலோசித்து வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைத்துள்ளது.

உணவுப் பொருட்களினதும், மற்றும் முக்கிய பொருட்களினதும் விநியோகம் சம்பந்தப்பட்ட ஊழல்களை, மோசடிகளை ஒழித்துக்கட்டவே அரசாங்கம் இந்தப் புது நடவடிக்கை பற்றி ஆராய்வதாக தெரிகிறது.

இது காலவரை பொருட்களின் விநியோகம் சம்பந்தப்பட்ட ஊழல்கள், மோசடிகள் ஆகியவற்றை ஒழித்துக்கட்ட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உரிய பலன் அளிக்காததாலேயே இந்த புதிய நடவடிக்கை பற்றி ஆராயப்படுகிறதாம்.

அரசாங்கத்தால் இந் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் உணவு, மற்றும் பொருட்கள் கள்ளச் சந்தைக்கு சென்றுவிடுவது அரசாங்கத்துக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது.

தற்பொழுது இடம்பெற்று வரும் மோசடிகளையும் ஊழல்களையும் ஒழிப்பதற்காக, துறைமுகத்தில் இருந்து நாட்டுப்புறங்களில் உள்ள கூட்டுறவுக் கடைகள் வரை பொருட்களை விநியோகம் செய்யும் பொறுப்பு இராணுவத்தினருக்கு விரைவில் அளிக்கப்படலாம் எனத் தெரிகிறது. (த-12)

## வேண்டுகோள்

கராச்சி, மார்ச் 16

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தம்முடன் இணக்கத்துக்கு வருமாறு மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலி பூட்டோ முஜிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கராச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பூட்டோ பேசுகையில், தாம் டாக்கா சென்று முஜிபரைச் சந்திக்க விரும்புவதாகவும், ஐக்கிய பாகிஸ்தான் மூலமே நாடு முன்னேற முடியும் என்றும் கூறினர்.


தி. மு. க.
பாடல்கள்
எம்ஜியாரின் பட முகப்புடன்
அண்ணு பதிப்பகம்
60 சத முத்திரைகள் அனுப்பிப் பெறவும்.
நவலட்சுமி
136, செட்டியார் தெரு,
கொழும்பு-11.



தந்தி
சிறு விளம்பரங்கள்

கராட்டி

வாலிபர்களே! உங்கள் எதிரிகளை நேருக்கு நேர் நின்று அடக்க ஆயுதம் பாவியாதீர்கள்! உங்கள் கைகால்களையே ஆயுதமாகப் பாவியுங்கள். கராட்டி, சீனடி, ஜூடோ என்பன பயின்று, திறமையான சண்டை வீரராகத் திகழுங்கள். இலகுவான மொழியில் பல விளக்கப் படங்களுடன் இப்பொழுது "கராட்டி சூரன்" எனும் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. 1ம் பாகம் ரூபா 5/50. 2ம் பாகம் ரூபா 5/-. இரண்டு பாகங்களையும் ஒரே முறையில் பெறுவதற்கு ரூபா 8/-. வி. பி. பி. மூலமும் அனுப்பப்படும். தபால் செலவு 75 சதம். இயக்குநர், உடலியல் பயிற்சி நிலையம், Central Suppliers, Physical Training Entp., 10, De Silva Road, Dehiwala.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பண்டா மாமா" அவளுக்குச் செய்தது என்ன?

# சிறுமி அழுது கொண்டு கோர்ட்டில் சாட்சியம்

அட்டன், மார்ச் 16

"விளையாடுவதற்காக வீட்டில் இருந்து வெளியே வந்த என்னை, சீனிபோளை தருவதாகக் கூறி எதிரி கூப்பிட்டார். நானும் ஆசைப்பட்டு அவருடைய வீட்டுக்குள் போனேன். அங்கு கோணிச் சாக்கு ஒன்றை எடுத்து தரையில் விரித்த அவர், என்னுடைய உள்ளாடையை களையச் சொன்னார். அவ்வாறு செய்த பின் என்னை சாக்கின் மேல் படுக்கச் செய்து பலாத்காரம் புரிந்தார்"

அட்டன் நீதவான் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில், விம்மி விம்மி அழுது கொண்டு மேற்கண்டவாறு முறையிட்டாள், எட்டு வயதே கொண்ட சிறுமி ஒருத்தி.

நோட்டன் பிரிஜ் பகுதியை சேர்ந்தவள் இச்சிறுமி. இவளைக் கற்பழித்ததாக அதே இடத்தில் வசிக்கும் ஒருவர் மீது நோட்டன் பொலீஸார் வழக்கு தொடர்ந்திருந்தார்கள்.

கண்ணீர் வழிந்தோட, அழுகையுடன் சிறுமி மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"எதிரி எங்கள் வீட்டுக்கு அருகே வசிப்பவர். அவருடைய பிள்ளைகளுடன் நான் விளையாடுவது வழக்கம். சம்பவ தினம், பிற்பகல், விளையாடுவதற்காக வெளியே வந்த என்னை, சீனிபோளை தருவதாக கூறி எதிரி அவருடைய வீட்டுக்குள் அழைத்தார். அப்போது அங்கு அவரைத் தவிர யாரும் இருக்கவில்லை.

"எனக்கு சீனிபோளை கொடுத்த பின் எதிரி, கோணிச் சாக்கு ஒன்றை எடுத்து கீழே விரித்தார். என்னுடைய உள்ளாடையை கழற்றும்படி சொன்னார் அவர். நான் அவ்வாறு ஆடையை களைந்த பின்னர் சாக்கில் படுக்கச் சொன்னார். நான் படுத்தேன். அதன் பின் என் பாவாடையை விலக்கி விட்டு, எதிரி என்னைப் பலாத்காரம் செய்தார்.

"நான் சத்தமிட முயன்றேன். ஆனால் அவர் என் வாயை பொத்தியபடியால் என்னால் குரல் எழுப்ப முடியவில்லை.

"அதன் பின் அம்மா கூப்பிடும் சத்தம் கேட்டு, உள்ளாடையையும் எடுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்தேன். அழுது கொண்டிருந்த என்னை, அம்மா "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். நான் நடந்த விஷயத்தை அவரிடம் கூறினேன்."

இவ்வாறு சிறுமி தன்னுடைய சாட்சியத்தில் கூறினாள்.

சிறுமியின் தாய் சாட்சியம் அளிக்கையில்,

"சம்பவ தினம், விளையாடுவதற்காக வெளியே வந்த மகள் அயலில் காணப்படாமல் இருக்கவே, அவளை பெயர் சொல்லி அழைத்தேன். இரண்டு தடவைகள் கூப்பிட்டும் வராமல் இருந்த மகள், மூன்றும் முறையாக கூப்பிட்ட பொழுது, எதிரியின் வீட்டுக்குள் இருந்து அழுது கொண்டு வந்தாள்.

"நான் காரணம் கேட்ட பொழுது மறுமொழி ஒன்றும் கூறாமல் வெட்கப்படுவதைப் பார்த்த நான் பக்கத்தில் கிடந்த தடியை எடுத்து அவளை அடித்தேன். அதன் பின், அவள், "பண்டா மாமா என் மேல் படுத்துக் கொண்டு ஏதோ செய்தார்" என்று சொன்னாள்.

"அவளுடைய கவுணில் சில பகுதிகள் இரத்தத்தினால் நனைந்திருப்பதை அவதானித்த நான் நடந்ததை ஊகித்து கொண்டேன். அதன் பின் என் கணவன் வந்த பின் பொலீஸுக்கு போய் முறையிட்டோம்" என்று கூறினார்.

சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்த எதிர்த்தரப்பு வழக்கறிஞர் அவர்கள் நீதிமன்றத்தில் கூறிய சாட்சியத்திற்கும், பொலீஸில் செய்திருக்கும் முறைப்பாட்டிற்கும் முரண்பாடுகளை நீதவானிடம் சுட்டிக் காட்டி, எதிரி நிரபராதி என்று வாதாடினார்.

"நீர் குற்றம் செய்திருக்கக்கூடும். ஆனால் சாட்சிய முரண்பாடுகள் காரணமாக தப்பிக் கொண்டீர் இனிமேல் இப்படி அயோக்கியத்தனமாக நடந்து கொள்ளாதேயும்" என்று எதிரியை எச்சரிக்கை செய்த நீதவான் அவரை விடுதலை செய்தார். (த-96)

## காதலில் ஏமாற்றமாம் காதலி வெட்டிக் கொலை

தான் காதலித்த பெண்ணைக் கைப்பற்ற முடியாததால் ஏமாற்றம் அடைந்த வாலிபன் காதலியையும், காதலியின் தந்தையையும் வெட்டிக் கொலை செய்தான்.

இந்தச் சம்பவம் பதுரலிய பொலீஸ் வட்டாரத்தில் நடைபெற்றுள்ளது.

தும்மோதரையில் வசிக்கும் வியனகே தொன் தோமஸ் என்பவரும், வியனகே தொன் லீலாவதி என்பவருமே இளைஞனால் வெட்டிக் கொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இந்தச் சம்பவம் சம்பந்தமாகக் கூறப்படுவதாவது—

"இறந்து போன தோமஸின் வீட்டிலேயே ஒரு இளைஞன் வாழ்ந்து வந்தான். இறந்து போன லீலாவதியுடன் சிலகாலம் சென்றபின் அந்த இளைஞன் காதல் கொண்டான்.

"இந்தக் காதல் தொடர்பை இறந்துபோன தோமஸ் எதிர்த்தார். இதனால் தோமஸ் தனது சகோதரன் வீட்டுக்கு இளைஞனை அனுப்பி வைத்தார்.

"எனினும் பிரச்சினை அத்துடன் ஓயவில்லை. தோமஸின் சகோதரர் வீட்டில் வசித்த போதும் இளைஞன் லீலாவதி மேல் கொண்ட காதலை மறக்கவில்லை. இதனால் விரோதம் மேலும் முற்றியது. தனது வீட்டில் வளர்ந்த இளைஞனுக்குத் தன் மகளைக் கொடுக்க தோமஸ் விரும்பவே இல்லை.

"ஒருநாள் மாலை தோமஸ், மகள் லீலாவதியுடன் கடைத் தெருவிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் வைத்து அவரது தலையில் கத்தி வெட்டு ஒன்று விழுந்தது. தனது தந்தையைக் காப்பாற்ற லீலாவதியும் இடையில் பாய்ந்தாள். அவளுக்கும் வெட்டுக் கிடைத்தது. இருவரும் துடி துடித்து இறந்தார்கள்.

பதுரலிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஈ. ஏ. ஏ. காகர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (12 - ஸ)

## உழவு யந்திரத் திருட்டில் ஒருவர் கைதானர்

உழவு யந்திரம் ஒன்றைத் திருடினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை பதுளை நீதவான் திரு. டக்ளஸ் விஜயரத்தின முன்னிலையில் மகாஓயா பொலீஸார் ஆஜர் செய்தனர்.

இது சம்பந்தமாக டி. எம். மாஹட்டன் என்பவர் மகாஓயா பொலீசில் புகார் செய்திருந்தார்.

பிரஸ்தாப புகாரில் அவர் கூறியிருந்ததாவது:-

"சம்பவதினம் நான் என்னுடைய வீட்டில் உள்ள அறை ஒன்றில் நித்திரை செய்து கொண்டிருந்தபோது யாரோ உழவு யந்திரத்தை இயக்கி அதை ஓட்டிச் செல்லும் சத்தம் கேட்டது.

"உடனே நான் வெளியில் வந்து பார்த்தபோது உழவு யந்திரத்தைக் காணவில்லை. அதன் பின் நான் ஓடிச் சென்றேன். எட்டு மைல் தூரம் கடந்து சென்றபின் ஓர் இடத்தில் அது நிற்பாட்டப்பட்டிருந்ததைக் கண்டேன். அத்துடன் இருவர் ஓடிச் செல்வதையும் என்னால் அவதானிக்க முடிந்தது.

இது சம்பந்தமாக மகாஓயா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. தயசேன ஒருவரைக் கைது செய்திருப்பதுடன் மற்றொருவரைத் தேடிக் கொண்டு இருக்கிறார். (த-8)

## இரண்டு இளைஞர்களை நீதிபதி எச்சரித்து விடுதலை

திருகோணமலை, மார்ச் 16

மருமகள் மீது சேட்டை பண்ணுதீர் என்று கூறிய மாமனாரைத் தாக்கினார்களாம், இரண்டு இளைஞர்கள்.

திருகோணமலை நீதவான் திரு. ஏ. சைமன் சில்வா முன் வந்த தாக்குதல் வழக்கு விசாரணை ஒன்றில் மேற்கண்ட தகவல் வெளியானது.

முறைப்பாட்டுக்காரரின் சார்பில் பொலீஸாருடன் ஆஜரான வழக்கறிஞர், "ஐயா, எனது கட்சிக்காரர் அமைதி நிறைந்தவர். அவருக்கு மருமகள் ஒருத்தி இருக்கிறார்.

பள்ளி செல்லும் பருவ மாணவி அவள்.

"முறைப்பாட்டுக்காரரின் வீட்டுக்கு அண்மையில் உள்ள ஒழுங்கையால் அம்மாணவி தினமும் செல்லும் பொழுது, எதிரிகள் இருவரும் சேட்டைகள் விடுவது வழக்கம்.

"மாணவி மீது பகிடிக் கதைகள் வீசுவதும் உண்டு.

"இதை எனது கட்சிக்காரர் ஆட்சேபித்தார். இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று எதிரிகளை எனது கட்சிக்காரர் பல முறை எச்சரித்தார். அதன் பலனாக எதிரிகள் இருவரும் எனது கட்சிக்காரரைத் தாக்கியுள்ளனர்" என்று கூறி முடித்தார்.

எதிரி தரப்பு வழக்கறிஞர், "அது அல்ல நடந்தது. அம் மாணவி, முறைப்பாட்டுக் காரருக்கு மருமகள் முறையல்ல. முறைப்பாட்டுக் காரர்தான் எதிரிகளைத் தாக்கியவர்" என்றார்.

இக் கட்டத்தில் இருதரப்பினரும் சமரசமாகப் போக இணங்கவே, நீதவான் எதிரிகளை எச்சரித்து விடுதலை செய்தார்.

"வயது வந்த பெண்கள் நிம்மதியாக வீதிகளில் செல்ல விட வேண்டும்" என்று எதிரிகளைப் பார்த்து நீதவான் சொன்னார்.

"மருமகள் மீது யாராவது சேட்டை பண்ணினால் பொலீசில் அறிவிக்கவும். நீராகப் போய் அவர்களுடன் மோத வேண்டாம்" என்று முறைப்பாட்டுக் காரரைப் பார்த்து நீதவான் சொன்னார். (த-287)

## பாராட்டு

லாகூர், மார்ச் 16

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தேர்தலில் பெற்ற அமோக வெற்றியை பாகிஸ்தான் ஆங்கிலத் தினசரியான "டைம்ஸ்" பாராட்டி உள்ளது.

## துடிப்புள்ள மந்திரி சபை

சென்னை, மார்ச் 16

தமிழகத்தில் ஒரு துடிதுடிப்புள்ள மந்திரி சபை திரு. மு. கருணாநிதி தலைமையில் பதவி ஏற்றுள்ளது என்று கூறலாம்,

ஏனெனில் இந்த மந்திரி சபையில் இளமைத் துடிப்புள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள்.

தமிழக மந்திரி சபையில் உறுப்பினர்களாக இருப்பவர்களின் சராசரி வயது 47 ஆகும். அதிலும் 35 வயதுக்கும் குறைந்த மூவர் தமிழக அமைச்சர்களாகியுள்ளனர்.


நேரில் சந்திக்கக் கூடியவரிடம்

### மாந்திரீகம் செய்யுங்கள்

பலன் கிடைத்ததும் பணம் செலுத்துங்கள்.
கவலையில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு வஞ்சகம் செய்யாமல்
மாந்திரீகம் செய்து பணம் பெறுகின்றோம்.
கிரகதோஷமிருப்பின் அவற்றை விலகச் செய்து
14 நாட்களில் நீங்கள் எதிர்பார்த்த தொழில்
கிடைக்கச் செய்வோம்.

★ தொழில் சம்பந்தமான பிரச்சினையா? ★ வாழ்க்கையில் முன்னேற்றம் வேண்டுமா? ★ கணவன் மனைவி இல் வாழ்க்கையில் தோல்வியா? ★ வீட்டில் தொல்லையா? ★ கடன் கிடைக்கவில்லையா? ★ வியாபாரத்தில் நஷ்டமா? ★ எவ்வளவு சம்பாதித்தாலும் பணம் மிச்சப்படுத்த முடியவில்லையா? ★ காதல் சம்பந்தமான பிரச்சினையா? ★ பகைவர்களின் தொல்லையா?

இப்படியான எவ்வித பிரச்சினைகளானாலும் 1½ நாளில் பலன் கிட்ட மந்திரம் செய்து தருவோம். சரி வந்தவுடன் பணம் செலுத்துங்கள்.

உங்களின் சொந்தக் கையெழுத்தில் கடிதம் எழுதி அனுப்புங்கள். காதல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு இலவச விபரங்களுக்கு எழுதுக. போயா நாட்களில் மட்டும் நேரில் சந்திக்கலாம்.

**வி. ராமையா,**
குப்த வித்தியாயதனய, ருக்கஹவில.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடெங்கும் பயங்கர ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

கள்ளத்தனமாக ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியன அசுர வேகத்தில் பெருந்தொகையாக இலங்கையில் தயாரிக்கப்படுவதாக கூறப்படுகிறது. நாட்டின் பல பாகங்களிலும் திடீர் சோதனை நடத்திய பொலீசார் இவை உற்பத்தியாக்கப்படும் பல இடங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

எசலமுல்லை என்ற இடத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பொலீசார் முற்றுகையிட்ட போது நிலத்திற்குக் கீழ் வெடி குண்டுகளும், எறி குண்டுகளும் பதுக்கப்பட்டு இருந்ததைக் கண்டு பிடித்தனர்.

இது போன்று வெடி குண்டுகளும் இன்னும் பல ஆயுதங்களும் அனுராதபுரம், பியாகலை, ஹக்காப்பொலை ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுவதை பொலீசார் கண்டு பிடித்துள்ளனர்.

இவை தவிர இன்னும் பல இடங்களில் இத்தகைய ஆயுதங்கள் உற்பத்தியாகின்றன என்று பொலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு இரகசியத் தகவல்கள் தினந்தோறும் கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

இவை எல்லாம் நாட்டிலே குழப்பம் ஒன்றை உருவாக்க சிலர் செய்யும் முயற்சிகளை ருசுப்படுத்துகின்றன எனப் பொலீசார் நம்புகின்றனர்.

அண்மையில் அசலமல்ல என்ற இடத்தில் திடீரென கைக்குண்டு ஒன்று வெடித்ததனால் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள்.

இந்தத் திடீர் விபத்தில் நாசகார சக்திகளுக்குப் பெரிய பங்குண்டு என்று நம்பப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் முன்னாள் மேயரின் காரைக் குண்டு வைத்துத் தகர்க்க முயற்சி எடுக்கப்பட்டது தெரிந்ததே. பொலீஸ் அதிபர் இதுவரை நடந்துள்ள சம்பவங்களைப் பற்றி பூரணமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என அறிவித்துள்ளார். (த-8)

## பிளாஸ்டிக்கில் உருவாகும் செயற்கை மனித இருதயம்

லண்டன், மார்ச் 16

இன்றைய நவீன உற்பத்தித் துறையில் பிளாஸ்டிக் ஒரு நுட்பமான செயற்கைப் பொருளாகக் கருதப்படுகிறது. பிரிட்டிஷ் மோட்டார் உற்பத்தித் துறையில் மட்டும் ஆண்டு தோறும் 40 ஆயிரம் தொன் பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகிறது. இதன் பெறுமதி 30 கோடி பவுண்களாகும். சாதாரணமான கார் ஒன்றில் 42 ருத்தல் எடையுள்ள பிளாஸ்டிக் உள்ளதாம்.

பிரிட்டனின் மாபெரும் உல்லாசக் கப்பலான இரண்டாவது குயின் எலிசபெத் கப்பலில் பிளாஸ்டிக் பெருமளவு பாவிக்கப்பட்டு இருக்கிறது. இக்கப்பலிலுள்ள 300 குளிக்கும் தொட்டிகள், 10,000 நாற்காலிகள், மின்சாரக் கம்பிகள் எல்லாமே பிளாஸ்டிக்கிலானவை.

வீடுகள் கட்டுவதற்கு இன்று விரும்பிப் பாவிக்கப்படுவது பிளாஸ்டிக் கான்கிரீட். சாதாரண கான்கிரீட் உறைந்து கடினமாக 28 நாட்கள் எடுக்கும். ஆனல் பிளாஸ்டிக் கான்கிரீட் 30 நிமிடங்களில் அதே விதித உறுதியைப் பெற்றுவிடுகிறது.

இவற்றை எல்லாம்விட வைத்திய விஞ்ஞானத்திற்கு மிகவும் பயன் அளிக்கத்தக்க புதுமையான ஆராய்ச்சியில் இப்பொழுது பிளாஸ்டிக் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அது தான் பிளாஸ்டிக்கிலான செயற்கை மனித இருதயம். இந்த நுண்ணிய பிளாஸ்டிக் இருதயத்தை அமைக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் பொறியியல் விஞ்ஞானிகள் வெற்றிக் கண்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. இந்த இருதயத்தை அமைத்து சத்திர சிகிச்சை மூலம் மனிதனின் பழுதுபட்ட இருதயத்திற்குப் பதிலாக இணைப்பது எதிர் காலத்தில் சாத்தியமாகலாமென நம்பப்படுகிறது.

## சர்வாதிகாரி ஸ்டாலின் தம் மனைவியைக் கொன்ருராம்

"சோவியத் நாட்டின் முன்னாள் தலைவர் ஸ்டாலின் தனது மனைவியைக் கொன்றதுடன் புகழ் பெற்ற சோவியத் எழுத்தாளர் மாக்ஸிம் கோர்க்கியையும் கொலை செய்யுமாறு உத்தரவிட்டார்"

சோவியத் அரசின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரியின் சகோதரி ஒருவரின் கடந்த கால நினைவுகளைக் கொண்ட நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலிலேதான் 1939-ம் ஆண்டு அவரால் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் பிரஸ்தாப திடுக்கிடும் தகவல்கள் காணப்படுகின்றன.

"சைபீரிய நாட்டில் ஏழாயிரம் நாட்கள்" என்பது இந்த நூலின் பெயராகும். தனது நினைவுகளைக் கூறியுள்ள கிரிகோரேவனு என்ற இந்தப் பெண் சோவியத் நாட்டு கைதிகள் முகாமில் அடைக்கப்பட்டு இருந்தவராம். இந்த முகாம் சைபீரியப் பிரதேசத்தில் அமைந்து இருந்தது.

ஸ்டாலின் மனைவியான அலிலுயேவா 1932-ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டார் என்றே முன்பு அரசாங்கம் அறிவித்தது.

1936-ம் ஆண்டு கோர்க்கி மரணம் அடைந்தார்.

தனது மனைவியைக் கொலை செய்துவிட்டு ஜாகொட என்ற பாதுகாப்பு அதிகாரியிடம் புகழ் பெற்ற டாக்டர் ஒருவரை அழைத்து வரும்படி கூறினாராம் ஸ்டாலின்.

அலிலுயேவா தற்கொலை செய்து கொண்டார் என்பதை ஊர்ஜிதப் படுத்துவதற்காகவே அவர் இந்த ஏற்பாட்டைச் செய்தார் என்று கிரிகோரேவனு கூறி உள்ளார்.

ஜாகொட ஒரு இருதய சிகிச்சை நிபுணரைத் தேடிப் பிடித்து விஷயத்தை விளக்கிய போது அவர் மரணப் பத்திரத்தில் கைச்சாத்திட மறுத்தாராம்.

இதைத் தொடர்ந்து தவறான சிகிச்சை அளித்து தன்னுடைய ஆட்சியில் அங்கத்தவர்களாக இருந்தவர்களைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்த டாக்டர் கொலை செய்யப்பட்டார் என்று தெரிகிறது.

கோர்க்கியை கொலை செய்யுமாறு ஜாகொடைக்கு உத்தரவிடப்பட்டது. அவர் தன்னுடைய உற்ற நண்பராக இருந்ததால் ஜாகொடை மிகவும் கலவரம் அடைந்தாராம்.

எனவே அவருடைய உறவினர்கள் சிலரை வெளி நாடுகளுக்கு அனுப்ப முயற்சித்தபோது ஜாகொடை கைதுசெய்யப்பட்டு அவரும் கொலை செய்யப்பட்டாராம். (த-8)

## கண்ணிலாக காதல தேயிலை மலைக்கானில் இன்பக்களிப்பு

மஸ்கெலியா, மார்ச். 16

காதலுக்குக் கண்ணில்லை, ஜாதி, மதம், இனமில்லை என்று சொல்லுவார்கள் என்றல் இடமும் வயதும் என்ன செய்யும்? அவனே 3 பிள்ளைகளுக்குத் தந்தை, வயதோ, நாற்பதிருக்கும். அவளோ இரண்டு பிள்ளைகளின் தாய். வயது 35 இருக்கும். இருந்தாலும் கட்டுடலும், கவருந் தோற்றமும் உடையாள். கண்ணும் கண்ணும் கலந்து காதல் வளர்த்து வருகையிலே, மோகத்தின் மேலீட்டால், தேயிலை மலைக் கானிலே காதல் லீலை கண்டு களித்திருக்க, இதையறியாது அப்பக்கம் வந்தவயோதிப மாது ஒருத்தி காதல் லீலையிலீடுபட்டிருந்த காளையின் மேல் காலூன்றிக் கதறிப் பயத்தால் படபடத்து மயங்கி வீழ்ந்தாள்.

பக்கத்திலே வேலை செய்த கொழுந்து கிள்ளும் பெண்கள், களவொழுக்கத்தில் களைக்கண்டிருந்த இருவரையும் கையும் மெய்யுமாகப் பிடித்தனர். தோட்டத் துரையிடம் ஒப்புவித்தனர். இன்பங் கண்ட இருவருக்கும் கிடைத்தது வேலை நீக்கம்.

மயங்கிய வயோதிபமாது மணிக்கந்தட்டை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டாள்.

பட்ட பகலில் நடந்தக் இக் காமன்கூத்து இப்பகுதியில் ஒரு தோட்டத்தில் நடந்ததாம்.

ஆத்திரம் தாங்காத தொழிலாளர் கூட்டம் இருவரையும் நையப் புடைத்த கதை இப்பகுதியில் காட்டுத் தீ போலப் பரவியுள்ளது. (311)

## பிரிட்டிஷ் தூதர் திரும்புகிறார்

கொழும்பு, மார்ச். 17

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. ஏ. எம். மக்கின்டொஷ் எதிர்வரும் புதன்கிழமை (மார்ச் 17-ந் திகதி) பிரிட்டனில் தமது விடுமுறையைக் கழித்து விட்டு இலங்கை திரும்புகிறார்.

திருமதி மக்கின்டொஷ் அவரது புதல்வி ஆனும் ஈஸ்டர் விடுமுறைக்கு பின்னர் இங்கு வருவார்கள்.

## ஜம்போ ஜெட் விமானம் இலங்கை வழியாக பறக்கும்

பெருந்தொகையான பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் மிகப் பெரிய ஜம்போ ஜெட் விமானம் விரைவில் இலங்கைக் கூடாகப் பறந்து செல்லும்.

பிரமாண்டமான ஜம்போ ஜெட் விமானங்கள் இலங்கையில் இறங்கிச் செல்லக் கூடியதாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மேலும் விசாலப்படுத்தப்பட உள்ளது.

சுமார் 750 பிரயாணிகள் வரை ஏற்றிச் செல்லும் ஜம்போ ஜெட் விமானங்கள் இறங்கிச் செல்ல வழி செய்யுமுகமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மேலும் 3000 அடிகளால் விசாலப்படுத்துமாறு அரசாங்கம் இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு விசாலப்படுத்துவதற்கு நாற்பது லட்சம் ரூபா வரை செலவிடவும் அரசாங்கம் தீர்மானித்து உள்ளது.

ஒரு வருட கால எல்லைக்குள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை விசாலப் படுத்தி, ஜம்போ ஜெட் விமானங்களை இறங்கிச் செல்ல வழி ஏற்படுத்த முடியும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. (த-12)

## ஸ்ரீமாவோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்காவின் பாராட்டறிக்கை எல்லாத் தினசரிகளிலும் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை சோஷலிசப் பாதையில் அழைத்துச் செல்லும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பாராட்டுச் செய்திக்கு முக்கிய இடமளித்து, அவரின் படத்துடன் முக்கிய செய்தியாக இந்தியத் தினசரிகளும் பிரசுரித்தது. இலங்கையின் சர்வதேச அரசியல் முக்கியத்துவத்தை வெளியிடுவதாக அமைந்துள்ளது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (த-10)

## பதுக்கிய பொருள்களைப் பொலீஸ் பறித்து விற்றது

நாவலப்பிட்டி, மார்ச் 16

கடைக்குள் பதுக்கிய உப உணவுப் பொருட்கள் பொலிஸ் உதவியால் பாதையில் விற்பனவுக்கு வந்தது. கியூ வரிசையில் நின்று மக்கள் வாங்கினர்.

நாவலப்பிட்டி நகர்க் கடைகளில்- மா, கொச்சிக்காய், வெள்ளைப்பூடு, உப்பு, சீனி ஆகிய உப உணவுகள் கையிருப்பில் இல்லை எனக் கூறியதைத் தொடர்ந்து இன்று திடீர் முற்றுகையிட்ட நாவலப்பிட்டி பொலீஸ் அதிபர் திரு. சிந்தாரணசிங்கா தலைமையிலான பொலீஸ் கோஷ்டி மா, கொச்சிக்காய் என்பனவற்றைப் பல கடைகளில் பெருமளவில் கைப்பற்றிப் பொதுமக்களுக்கு கியூ வரிசையில் நிறுத்தி பிரித்து விற்க வகை செய்து வைத்தது.

ஒலிபெருக்கி மூலம் அவற்றைப் பெற்றுச் செல்லும்படி பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். (215)

விவாகம் நடைபெற!
கொடியவர்களை அடக்க,
வேண்டியவர்களை வசியமாக்க,
வேண்டாதவர்களை ஒதுக்க,
கணவன் மனைவி பிணக்குகள் நீங்க,
வியாபாரம் முன்னேற்றம் அடைய,
ஆகியவற்றிற்கு மந்திரம் செய்து தருவேன். விபரங்களுக்கு எழுதவும்:
பீ. எம். திசாநாயக்க,
103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானை. தொ. பே. 33955.

இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம். 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியீட்டு திகதி 17 மார்ச் 1971.

THANTHI, 5, Gunasena Mawath Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org